

நீலகிரி மாவட்டம், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவனையில், முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், வீடு இடிந்து உயிரிழந்தவரின் உடலை நேற்று முன்தினம் (02.12.2024) நேரில் பார்வையிட்டு, மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.4 இலட்சத்திற்கான அனுமதியாணையினை, அன்னாரது தாயாரிடம் வழங்கி, ஆறுதல் தெரிவித்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு, உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா, முன்னாள் அரசு கொறடா முபாரக் உட்பட பலர் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சி சிறுகடம்பூர் பகுதியில் புயல் மழையால் சேதமடைந்த மின்கம்பங்கள் சீரமைக்கும் பணியை மின்சாரத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான், தமிழ்நாடு மின்சார துறை தலைவர் நந்தகுமார், இயக்குனர் மஸ்கர்னல், ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜயகுமார், வல்லம் அமுதாரவிக்குமார், பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் உள்ளனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம் மாநகராட்சி, கன்னங்குறிச்சி புது ஏரியிலிருந்து உபரிநீர் வெளியேறி வருவதை நேற்று முன்தினம் (02.12.2024) நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். உடன், சேலம் மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் செயலாளராகப் பணிபுரிந்த

# ஏ.எம்.இராமன்ஐ.ஏ.எஸ்.(ஓய்வு)மறைவு!

## உயர் அதிகாரிகள் அஞ்சலி!

சென்னை, டிச. 4 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி ஏ.எம்.இராமன் அவர்கள்மறைவெய்தினார். சென்னை, இந்திரா நகர் இல்லத்தில் செவ்வாய்க் கிழமை, அவர் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. புதுக் கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகே அமரடக்கி கிராமத்தில் இன்று (புதன் ) நல்லடக்கம் நடைபெறுகிறது.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளராக, 1996 முதல் 1999 வரை பதவி வகித்தவர் ஏ.எம்.ராமன், ஐ.ஏ.எஸ்.; அதற்குமுன், 1983 முதல் 1986 வரை தமிழ்நாடு ஆளுநரின் செயலாளராகவும், தொழில்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, கல்வித் துறை முதலான பல்வேறு துறைகளிலும் சிறப்பாகப் பணிபுரிந்து பாராட்டப் பெற்றவர்.

1989ஆம் ஆண்டில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர்களில் ஒருவராகவும், பின் கோவை மாவட்ட ஆட்சியராகவும் நியமிக்கப்பட்டவர். கோவை மாவட்டத்தின் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கும் பொதுமக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் பாடுபட்டவர். அன்றைய தமிழ்நாடு அரசின் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி முதலமைச்சர் கலைஞர் அவர்களின் பாராட்டுகளைப் பெற்றவர். இவருடைய முனைப்பான பல்வேறு பணிகளையும் சுட்டி க் காட்டி, “ராமன் எத்தனை ராமனடி என்று பாராட்டத் தோன்றுகிறது” என்றும், “ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ராமனாக கலெக்டர்கள் திகழ வேண்டும்” என்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

ஏ.எம்.இராமன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் கடந்த சில மாதங்களாக உடல் நலிவுற்று தனியார் மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டு வந்தார். சிகிச்சை பலனின்றி 2.12.2024 அன்று இரவு 8.15 மணிக்கு அவர் உயிர் பிரிந்தது. புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகில் உள்ள அமரடக்கி கிராமத்தில் மாணிக்க உடையார்பிச்சையம்மாள் ஆகியோரின் மகனாக 12.9.1946 அன்று பிறந்த இவரது வயது 78 ஆகும். இவர், திருச்சி புது க் கோட்டை சாலையில் உள்ள பாவேந்தர் பாரதிதாசன் கல்விக் குழுமத்தின் ஆலோசகர்.

ஏ.எம்.இராமன் அவர்களின் உடல் சென்னை, இந்திரா நகர் முதல் பிரதான சாலையில் உள்ள அவரது இல்லத்தில், செவ்வாய்க்கிழமை காலை முதல் நண்பகல் 1 மணி வரை பொது மக்களின் பார்வைக்காக வைக் கப்பட்டது.

**கி.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அஞ்சலி!**

இவரது உடலுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் முனைவர் கி.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) தமது குடும்பத்தாருடன் சென்று அஞ்சலி செலுத்தினார். மேலும் பல ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் ஏ.எம். இராமன் அவர்களின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அதன் பின்னர் அவரது உடல் ஆம்புலன்ஸ் மூலம் புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகில் இருக்கும் அவரது சொந்த ஊரான அமரடக்கி கிராமத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு அவரது உடல் இன்று (புதன்கிழமை - 4.12.2024) பகல் 12 மணி அளவில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

மறைந்த ஏ.எம்.இராமன், ஐ.ஏ.எஸ்., அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அன்புக்குரிய நண்பராக விளங்கிய தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் நடராசன் அவர்களின் மருமகன். சேலம் கிழக்கு தி.மு.க.மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், கள்ளக்குறிச்சி தொழில் அதிபர் ஏ.மணி ஆகியோரின் சம்பந்தி ஆவார்.

இவருக்கு திருமதி பானு ராமன் என்ற மனைவியும், டாக்டர் எம்.ஆர்.பாரி, டாக்டர் எம்.ஆர்.அருண் என இரண்டு மகன்களும், இரண்டு பேரன்களும், இரண்டு பேத்திகளும் உள்ளனர்.



நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் தமிழ்நாடு துணை முதலமைச்சரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருச்செங்கோடு நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் நகர மன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு பிரியாணி உணவு வழங்கி, அவர்களுடன் அமர்ந்து மதிய உணவு அருந்தினார். இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாநகராட்சி சார்பில் 4வது மண்டலத்தில் உள்ள மோளக்கவுண்டன் பாளையம் அரசு ஆரம்ப பள்ளியில் முத்தமிழறிஞர் கலைஞரின் வரும் முன் காப்போம் திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனை முகாமில் மேயர் சு.நாகரத்தினம் கலந்து கொண்டு பொது மக்களுக்கு மருந்து பெட்டகத்தை வழங்கினார் . நிகழ்வில் துணை மேயர் வி.செல்வராஜ், மாநகராட்சி ஆணையர் என்.மனிஷ், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், பொறியாளர் சி.விஜயகுமார், மாநகர் நல அலுவலர் டாக்டர் கார்த்திகேயன், மண்டல தலைவர்கள் குறிஞ்சி என்.தண்டபாணி, ப.க.பழனிச்சாமி, சசிகுமார், மாமன்ற உறுப்பினர்கள் தண்டபாணி, எம்.என்.ராமலிங்கம், சக்திவேல், குணசேகரன், வட்டச் செயலாளர் முகுந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### “செந்தமிழ்ச் சிற்பிகள்” அரங்கம்:

# தமிழ் எழுத்தாளர்களுக்கான கௌரவம்!



அண்மையில் ஒரு புத்தக வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொள்ளும் பொருட்டு, அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்குச் சென்றிருந்தேன். என்னைப் பார்த்ததும் முதன்மை நூலகர் காமாட்சி, “செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கத்தைப் பார்த்தீர்களா?” என்று கேட்டார். அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் நுழைவாயிலுக்கு நேரெதிரில் இருந்த ‘செந்தமிழ்ச் சிற்பிகள்’ அரங்கத்திற்குள் சென்றோம். பழந்தமிழ் முன்னோடிகள், தமிழ் வளர்த்த அயல் நாட்டு அறிஞர்கள், வரலாற்றுத் தமிழ் ஆய்வாளர்கள், தனித்தமிழ் அறிஞர்கள், இசைத் தமிழ், நாடகத் தமிழ், அறிவியல் தமிழ், மெய்யியல் அறிஞர்கள், தொல்லியல் அறிஞர்கள், பதிப்பாசிரியர்கள், திறனாய்வு, நாட்டாரியல் ஆய்வறிஞர்கள், கவிஞர்கள், சிறுகதையாசிரியர்கள், நாவலாசிரியர்கள், திராவிடப் பெரும் ஆளுமைகள், தமிழ் மொழி வளர்ச்சிக்கு உதவியவர்கள் என்று இருபத்து நான்கு பிரிவுகளில் 180-க்கும் மேற்பட்டவர்களுடைய உருவங்கள் ஓவியங்களாக வரைந்து வைக்கப்பட்டிருந்தன.

ஒவ்வொரு ஓவியத்திற்கும் கீழே, சம்பந்தப்பட்டவர் யார், அவர் ஆற்றிய பணி என்ன, அவர் பெற்ற முக்கியமான விருது என்ன என்பது குறித்த குறிப்புகளும் வைக்கப்பட்டிருந்தன. அதற்குப் பக்கத்தில் சம்பந்தப்பட்டவரின் கையெழுத்து நகல் வைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஓவியத்திற்கும் கீழே QR Code இருக்கிறது. அதை ஸ்கேன் செய்து




பார்த்தால், குறிப்பிட்ட எழுத்தாளர் எந்தெந்த ஆண்டுகளில் என்னென்ன நூல்களை எழுதினார், என்னென்ன விருதுகளை வாங்கியிருக்கிறார் என்ற முழு விவரங்கள் இருக்கின்றன.

ராமலிங்க அடிகளாரில் தொடங்கி மீனாட்சி சுந்தரனார், ஆறுமுக நாவலர், உ.வே.சாமிநாதையர், சி.வை.தாமோதரனார், வீரமாமுனிவர், சீகன் பால்கு, இராபர்ட் கால்டுவெல், கமில் சுவலபில், பரிதிமாற் கலைஞர், மறைமலையடிகள், தேவநேயப் பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனார், பம்மல் சம்பந்தனார், சங்கரதாஸ் ஸ்வாமிகள் என்று ஒவ்வொரு ஓவியத்தையும் பார்த்துக் கொண்டே வந்தேன். QR Code-ஐ ஸ்கேன் செய்து, அவர்கள் ஆற்றிய பணிகளை அறிந்துகொண்டபோது மலைத்துப்போனேன்.

விபுலானந்த அடிகள், அயோத்திதாசப் பண்டிதர், பாரதி, பாரதிதாசன், இராஜாஜி, சோம சுந்தர பாரதியார் என்று நான் பார்த்துக்கொண்டே வரும்போது என்னுடைய படத்தையும் ஓவியமாக வரைந்து வைத்திருந்தைப் பார்த்து பயந்துபோனேன். “என்னுடைய படம் எப்படி இங்கே இடம் பெற்றது?” என்று கேட்டேன். “சாகித்திய அகாதமி விருது பெற்ற அத்தனை தமிழ் எழுத்தாளர்களுடைய ஓவியமும் கையெழுத்தும் தகவல்களும் முழுமையாக இடம் பெற்றிருக்கின்றன” என்று காமாட்சி கூறியதைக் கேட்டு அசந்துபோனேன். சாகித்திய அகாதமி விருது பெற்ற எழுத்தாளர்கள் யார்யார் என்று பார்த்தேன். அ.மாதவையா, கல்கி, ரா.கிருஷ்ண மூர்த்தி, சி.சு.செல்லப்பா, எம்.வி.வெங்கட்ராம், கி.ராஜநாராயணன், ஜெயகாந்தன், அசோகமித்திரன், தி.ஜானகிராமன், வை.கு.கோதைநாயகி, லட்சுமி, திலகவதி, சு.வெங்கடேசன், அம்பை என்று 2023 வரை சாகித்திய அகாதமி விருது பெற்றவர்களின் ஓவியங்கள் இடம்பெற்றிருந்தன. அரங்கமும், ஓவியங்கள் வைக்கப் பட்டிருக்கும் விதமும் நேர்த்தியாக இருந்தன. அரசு நிறைய செலவிட்டிருப்பது தெரிந்தது.

“இந்த அரங்கத்திற்கு நிறைய பார்வையாளர்கள் வருகிறார்களா?” என்று கேட்டேன். “வேலை நாள்களில் 500-க்கு அதிகமானவர்களும், விடுமுறை நாள்களில் 1,000-க்கு மேற்பட்டவர்களும் வந்து பார்வையிடுகிறார்கள். ஒருசில ஓவியங்களுக்கு அருகில் நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டு போகிறார்கள். ‘இவர் எழுதிய நூல்களை நாங்கள் படித்திருக்கிறோம். ஆனால், இவர் இப்படித்தான் இருப்பார் என்பது எங்களுக்குத் தெரியாது. அதனால்தான், புகைப்படம் எடுத்துகொண்டோம்’ என்று சொல்கிற பார்வையாளர் களும் இருக்கிறார்கள். ஒருசில அறிஞர்களின், எழுத்தாளர்களின் உறவினர்கள் வந்து, ‘இவர் எனக்கு இன்ன உறவு, ஆனால் நேரில் பார்த்ததில்லை. அதனால், புகைப்படம் எடுத்துக்கொண்டோம்’ என்று பெருமிதமாகச் சொல்வதைப் பலமுறை கேட்டிருக்கிறேன்” என்று காமாட்சி சொன்னார்.

“போட்டித் தேர்வுக்குப் படிக்கிறவர்கள் QR Code-ஐ ஸ்கேன் செய்து தமிழ் எழுத்தாளர்கள், அறிஞர்கள் பற்றிய தகவல்களை எடுத்துக்கொள்கிறார்கள். கஷ்டப்பட்டுத் தேடி எடுக்க வேண்டிய தகவல்கள் எல்லாம் எளிதாகக் கிடைப்பதாகச் சொல்லிவிட்டுப் போகிறார்கள்” என்றும் அவர் சொன்னார். தமிழ் எழுத்தாளர்கள், தமிழறிஞர்கள் பற்றிய தகவல்களை எளிதாகப் பெறக் கூடிய இடமாகவும் செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம் இருக்கிறது. “விடுபட்டுப்போன எழுத்தாளர்களையும் தமிழறிஞர்களையும் காட்சியில் இடம்பெறச் செய்கிற வேலை தொடர்ந்து நடைபெறுகிறது” என்று காமாட்சி சொன்ன செய்தி மனத்திற்கு உவப்பானதாக இருந்தது.

நான் நாற்பதாண்டு காலமாக நூல்களைப் படித்துக் கொண்டிருந்தாலும், எழுத்தாளராகிப் பதினேழு நூல்களை எழுதியிருந்தாலும் பல எழுத்தாளர்களுடைய முகங்களை, அவர்களுடைய கையெழுத்தை, அவர்கள் எழுதியிருந்த நூல்களின் பட்டியலைப் பார்த்து நானே வியந்துபோனேன். பெரியசாமித் தூரன், செய்குதம்பி பாவலர், தனிநாயகம் அடிகளார், க.வெள்ளைவாரணனார், புலவர் குழந்தை, கவிஞர் கண்ணதாசன் என்று பலரைப் பற்றிய தகவல்களை விரிவாக அறிந்துகொண்டேன். திராவிட இயக்கத்தின் பெரும் ஆளுமைகளான பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோரின் ஓவியங்களும் தகவல்களும் இடம்பெற்றிருக்கின்றன. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் ‘செந்தமிழ்ச் சிற்பிகள்’ போன்ற அரங்கம் இருப்பதற்கு வாய்ப்பே இல்லை. எழுத்தாளர்களை, கவிஞர்களை, ஆய்வறிஞர்களை எத்தனை குடும்பம் கௌரவமாக நடத்தியிருக்கிறது, பெருமைக்குரியவர் என்று பாதுகாத்துப் போற்றியிருக்கிறது என்ற கேள்விக்கு என்னிடத்தில் மகிழ்ச்சியான பதிலில்லை.

கடைசியாகப் பார்வையாளர்களின் பதிவேட்டைப் பார்த்தேன். அதில் ஒருவர், “செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கத்திற்கு வெளியே பிரம்மாண்டமான குத்துவிளக்கு ஒன்று இருப்பதைப் பார்த்ததும் நூலகத்திற்குள் கோயிலும் இருக்கும் போல என்று நினைத்துக் கொண்டுதான் வந்தேன். அரங்கத்திற்குள் வைக்கப்பட்டிருந்த ஓவியங்களைப் பார்த்த பிறகு, ஓவியங்களாக மாறியிருக்கும் மனிதர்களுடைய தமிழ்ப் பணிகளை அறிந்துகொண்ட பிறகு, கோயிலைவிடவும் மேலான இடத்திற்கு வந்திருப்பதாக உணர்ந்தேன்” என்று எழுதியிருந்ததைப் படித்ததும் பிரமித்துப்போய் அப்படியே நின்றுவிட்டேன்.

செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கத்திற்குள் ஓவியங்களாக வைக்கப்பட்டிருக்கும் மனிதர்கள் முந்நூறு, நானூறு ஆண்டுகளாக உருவாக்கிய இலக்கியங்கள்தான், இன்றைய தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு, தமிழ் மொழி. இவர்களின்றித் தமிழ் மொழி இல்லை. இவர்கள்தான் இன்றைய தமிழ்நாடு. இவர்கள்தான் இன்றைய தமிழ் மொழி.

சென்னையின் முக்கியமான அடையாளங்களில் ஒன்றாக இருப்பது அண்ணா நூற்றாண்டு நூலகம். அந்த நூலகத்திற்கு அடையாளமாக இப்போது செந் தமிழ்ச் சிற்பிகள் அரங்கம் மாறியிருக்கிறது. ஓவியர்கள் வள்ளிநாயகமும் கோபியும் பாராட்டுக்குரியவர்கள். முடிந்தவரை எழுத்தாளர்களின், அறிஞர்களின் உருவங்களைத் துல்லியமாக வரைய முயன்றிருக் கிறார்கள். தங்களுடைய முயற்சியில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள்.

தமிழ் மொழிக்காக, அதன் வளர்ச்சிக்காக உழைத்தவர்



களை, உழைத்துக் கொண்டிருப்பவர்களைத் தமிழ்ச் சமூகத்திற்கு அடையாளப்படுத்துவதோடு அவர்கள் பற்றிய தகவல்களை மிக முக்கியமான ஆவணம்போல் பாதுகாக்க வேண்டும் என்று நினைத்த பள்ளிக்கல்வித்துறை அமைச்சரையும், தமிழ்நாட்டின் முதலமைச்சரையும், நூலகத் துறையையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். எழுத்தாளர்களுக்கும் தமிழறிஞர்களுக்கும் தமிழ்நாடு அரசு செய்திருக்கிற உயரிய கௌரவம்தான் செந்தமிழ்ச் சிற்பிகள் அரங்கம்.

17.09.2024 அன்று தமிழ்நாடு அரசு, பள்ளிக்கல்வித் துறை சார்பில் “செந்தமிழ்ச் சிற்பிகள்” அரங்கம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர் களால் திறக்கப்பட்டது.



எழுத்தாளர்
**இமையம்**

### நீலகிரி மாவட்டத்தில் - மழையினால் வீடு இடிந்து

# உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ.4 இலட்சம் நிதி!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி வழங்கினார்!

உதகை, டிச. 4 -

நீலகிரிமாவட்டம்,உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவனையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், வீடு இடிந்து உயிரிழந்தவரின் உடலை நேற்று முன்தினம் (02.12.2024) நேரில் பார்வையிட்டு, மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.4 இலட்சத்திற்கான அனுமதியாணையினை,அன்னாரது தாயாரிடம் வழங்கி, ஆறுதல் தெரி வித்தார்.

இந்நிகழ்வில்,மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்வுகளில்,உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர். கணேஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி. என்.எஸ்.நிஷா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், முதுமலை புலிகள் காப்பக துணை இயக்குநர் அருண், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், முன்னாள் அரசு கொறடா முபாரக், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, உதகை வருவாய் கோட்டாட்சியர் சதீஷ்,

தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் திருமதி. ஷிபிலா மேரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சதீஸ், உதகை நகரமன்றத்தலைவர் திருமதி.வாணீஸ்வரி, துணைத் தலைவர் ரவிக்குமார், உதவி இயக்குநர்கள் சரவணகுமார் (ஊராட்சி கள்), முகமது ரிஸ்வான் (பேரூராட்சிகள்), நெடுஞ்சாலைத் துறை கோட்டப்பொறியாளர் குழந்தைராஜ், செயற் பொறியாளர் எழில்,வட்டாட்சியர்கள் சங்கர்கணேஷ் (உதகை), கனிசுந்தரம் (பேரிடர் மேலாண்மைத்துறை), மரு.ரவிசங்கர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ் உட்பட அரசுத் துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.